# கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# கலைமாணி நிலைII, முதலாம் அரையாண்டு

# கல்வியாண்டு- 2019/2020

# மீள் பரீட்சார்த்திகளுக்கான பரீட்சைக்கான விண்ணப்பம் கோரல்

---

மேற்படி கற்கை நெறியின் மீள் பரீட்சார்த்திகளுக்கான பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இங்கு தரப்பட்டுள்ள இணையவழி இணைப்பினை சொடுக்கி பாடப்பதிவினை மாணவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

- பொதுக்கலை மாணவர்களுக்கான இணையவழி இணைப்பு:

  https://forms.gle/3eSKCHQcqHNrdTvM7

- சிறப்புக்கலை மாணவர்களுக்கான இணையவழி இணைப்பு:

  https://forms.gle/DU9vk5Yz1C3drb1y7

---

**மீள் பரீட்சார்த்தி மாணவர்கள் விண்ணப்பத்தினை பூர்த்திசெய்து இணைய வழியினூடாக சமர்ப்பித்தல் வேண்டும். 25.10.2022 பி.ப 4.00 மணியுடன் விண்ணப்பங்கள் ஏற்கப்படுவது நிறுத்தப்படும்.**

குறிப்பிட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்யாத மற்றும் முழுமையாக விண்ணப்பங்களை நிரப்பி சமர்ப்பிக்காத மாணவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஒரு பரீட்சார்த்தி ஒரு விண்ணப்பத்தினையே சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பத்தினை சமர்ப்பித்த பின்பு அதனை மீண்டும் மாற்றிக்கொள்ள முடியாது என்பதனையும் கவனத்தில் கொள்க.

**முதலாம் அரையாண்டுப் பரீட்சை 08.11.2022அன்று ஆரம்பமாகும்.**

நிலை II முதலாம் அரையாண்டு பரீட்சையில் மீள் பரீட்சார்த்திகளாக தோற்ற விரும்புபவர்கள் மட்டும் விண்ணப்பித்தல் வேண்டும். ஏனையவர்கள் இவ்விண்ணப்பத்தினை பூர்த்திசெய்யத் தேவையில்லை.

மேலும் 2018இற்கு முற்பட்ட பதிவிலக்கமுடைய batch missed மாணவர்கள் நேரடியாக பீடாதிபதி அலுவலகத்திற்கு வருகைதந்து பிரதிப் பதிவாளரை சந்திக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மீள் பரீட்சார்த்திகளிடம் மருத்துவ மற்றும் பொருத்தமான காரணங்கள் காரணமாக பேரவையினால் அனுமதிக்கப்பட்ட ஆவணம் காணப்படின் அதன் புகைப்படத்தினை (image) வழங்கப்பட்ட விண்ணப்படிவத்தில் தரவேற்றுமாறு (upload) கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**மீள் பரீட்சைக்கான ஒரு பாட அலகிற்கான கட்டணமாக ரூ.250/-வினை** மக்கள் வங்கிக் கணக்கு இல. 040000120000411 இற்கு செலுத்திய பற்றுச்சீட்டின் புகைப்படத்தினை (image) வழங்கப்பட்ட விண்ணப்படிவத்தில் தரவேற்றுமாறு (upload) கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மீள் பரீட்சைக் கட்டணத்தின் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியினையும், பேரவையினால் அனுமதிக்கப்பட்ட ஆவணம் காணப்படுமாயின் அதன் மூலப்பிரதியினையும் பரீட்சை அனுமதி அட்டை (Examination Admission Card) பெற்றுக்கொள்ளும் போது பீடாதிபதி அலுவலகத்தில் ஒப்படைத்தல் வேண்டும்.

**பிரதிப் பதிவாளர்**
**கலைப்பீடம்**